**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். 164 /2014**

2023 ஆம் ஆண்டு மே மாதம் 11 ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சம்பத் | தொழில் | : அரசு டாஸ்மார்க் - பணி |
| தந்தை பெயர் | : சாமிநாதன் | சமயம் | : |
| கிராமம் | : கொடுக்கன்குப்பம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 48 |

தேதி 11.05.2023

சாட்சியையும் எதிரியும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியதாஸ் Gr.1 - 2692 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.
( **எதிரி ஆஜர் .**)

**முதல் விசாரணை**

**1.** நான் கொடுக்கன்குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது திண்டிவனத்தில் உள்ள அரசு டாஸ்மாக் கடையில் ஃபார் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோனவர் கருப்பாக இருப்பார். பெயர் தெரியவில்லை. அவர் சேத்பட்டு என்று கேள்விப்பட்டேன்.

கடந்த 2013 ம் வருடம் மாதம், தேதி ஞாபகம்இல்லை. ஒரு நாள் மேல்செவலாம்பாடியில் உள்ள அரசு டாஸ்மாக் கடையில் பார் மாஸ்டராக பணிபுரிந்கொண்டியிருந்தேன். அன்றையதினம் மாலை 4.45 மணி அளவில் டீச்சர் வேலைபார்க்கும் ஒரு பெண்ணும், அவர் கணவரும் அவர்களது XL வண்டியில் அவலூர்பேட்டையில் இருந்து சேத்பட்டு நோக்கி வந்துகொண்டியிருந்தபோது மேற்படி டாஸ்மாக் கடை அருகே எதிரே வந்த பெண் அழைப்பு 4 சக்கர வாகனத்தில் ரேடியோ செட் ஏற்றிக்கொண்டு அந்த வாகனத்தை ஓட்டி வந்தவர் இருச்சக்கர வாகனத்தை மோதிவிட்டது. சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். உடனே ஓடி வந்து சோடா எடுத்துகொண்டு அவர்களிடம் கொடுத்தேன். பிறகு நான் டாஸ்மாக் கடைக்கு வந்துவிட்டேன். எதிரே வந்த வாகனத்தை ஓட்டிவரை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. போலிசார் விசாரணையில் கடந்த 13.03.2013 ம் தேதியன்று மாலை 5.30 மணி அளவில் நான் மேல்செவலாம்பாடியில் உள்ள டாஸ்மாக் கடையில் வேலை செய்துகொண்டியிருக்கும்போது அவலூர்பேட்டையில் இருந்து சேத்பட்டு நோக்கி வந்த TN 256768 என்ற TVS XL வண்டியில் எனக்கு தெரிந்த இவ்வழக்கில் இறந்துபோன இருதயகுமார் என்பவர் அவரது மனைவி உமா என்பவர் பள்ளியை முடித்து வந்துகொண்டுடியிருந்தபோது எதிர் திசையில் சேத்பட்டுவில் இருந்து கல்யாணம் ஊர்வளம் போகும் TN 01497 என்ற 4 சக்கர வாகனம் அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் , கவணக்குறைவாகவும் இருதய குமார்என்பவர் மீது மோதியதில் அவர் தலை, கை, மார்பில் பலத்த அடிப்பட்டது என்றும், அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் சேத்பட்டு மருத்துவமணையில் இறந்துவிட்டார் என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது ஆஜர் எதிரியை காப்பாற்ற வேண்டி உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

**4.** அரசு மதுபான கடையினுள் உள்ளேதான் வேலை பார்த்த நிலையில் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேனா என்றால் ஆமாம். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியவரை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. ஆஜர்எதிரியை விபத்து நடந்த இடத்தில் நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. இந்த விபத்தானது TVS XL ஓட்டி வந்த இருதயகுமார் கவணக்குறைவாலும், அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் ஆமாம். போலிசார் தனிப்பட்ட முறையில் விசாரித்தார்களா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**